திருமயத்தில் வட்டமைய மருத்துவமனை

* 346 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருமயத்தில் பல படுக்கை வசதிகளைக் கொண்ட வட்டமைய மருத்துவமனை (Taluk Headquarters Hospital) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்து மருத்துவத் துறைக்கு மாற்றப்பட்டபின் திருமயம் மருந்தகத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட வட்டமைய மருத்துவமனையாக்க செயற்குறிப்புக்கு ஒப்புதல் பெற்று, நிதி நிலையைப் பொருத்து, வேலை துவங்கப்படும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயத்தில் இந்த வட்டமைய மருத்துவமனை இன்னும் எவ்வளவு காலத்திற்குள் அங்கு அமைக்கப்படலாம் என்பதை அறிய விரும்புகிறேன். எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : காலத்தைப் பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியாது என்றாலும், நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஆனால், இப்பொழுது திருமயத்திற்கு பத்து மைல் சுற்றுவட்டாரத்தில் பல மருத்துவ நிலையங்கள் இருப்பதால், நோயாளிகள் அவசரமாகச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமும், விரைவிலே துவங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இருக்கவில்லை. இருந்தாலும், செயற்குறிப்பில் இருப்பதன் காரணமாக, விரைவிலே அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எல்லா விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளும்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, திருமயத்தில் ஆஸ்பத்திரி வற்படுத்துவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆஸ்பத்திரி கட்டுவதற்கு என்ன செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதிப்பீட்டுச் செலவுத் தொகை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. 3 ஏக்கரா 69 செண்ட் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மதிப்பீடு வரையறுக்கப்படவில்லை.

திரு. ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டம், அரியலூரிலுள்ள மருத்துவமனையில் எக்ஸ்-ரே பிரிவு கட்டி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இன்னும் அந்தப் பிரிவு வேலை செய்யத் தொடங்கவில்லை. இதை அரசு உடனடியாகக் கவனித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனியாகக் கேள்வி போடட்டும்.